வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 14.03.2026** **நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அசாம் மாநிலம் சில்ச்சரில், 23 ஆயிரத்து 550 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்தார்.

ஹிமாச்சல் பிரதேசம் தரம்சாலாவில், இன்று நடைபெற்ற மத்திய பல்கலைக்கழகத்தின் 9ஆவது பட்டமளிப்பு விழாவில், குடியரசுத் துணைத் தலைவர் திரு. சிபி. ராதாகிருஷ்ணன், கலந்து கொண்டார்.

புதுச்சேரியில், வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி சிலிண்டர்களை, வணிக நோக்கங்களுக்காக பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப் பட்டுள்ளதாக, குடிமைப் பொருள் வழங்கல் துறை தெரிவித்துள்ளது.

ஹைதராபாத்தில் நடைபெறும் மகளிர் உலக கோப்பை ஹாக்கி தகுதி சுற்று இறுதி ஆட்டத்தில், இன்றிரவு 7.30 மணிக்கு, இந்தியா, இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

-----------------------------

*பிரதமர் 1 (6)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அசாம் மாநிலம் சில்ச்சரில், 23 ஆயிரத்து 550 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்தார். தொடர்ந்து, அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், எழுச்சிமிகு கிராமம் இயக்கத்தின் கீழ், எல்லைப் பகுதிகளில் உள்ள கிராமங்களின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக, தெரிவித்தார். இந்நிகழ்ச்சி குறித்த கூடுதல் தகவல்கள்....

**(வாய்ஸ்)**

*பிரதமர் 2 (17)*

**(வாய்ஸ்)**

இன்று தொடக்கி வைக்கப்பட்ட திட்டங்கள் மூலம் இளைஞர்களுக்கு எண்ணற்ற வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்றும், மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில், மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும், வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டில், அரசு உறுதியுடன் உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். வளர்ச்சியின் பலன்கள், அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதை, தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வருவதாகவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில், தனி கவனம் செலுத்தி வருவதாகவும், கூறினார். மேற்காசியாவில் தற்போது நிலவி வரும் பதற்றமான சூழ்நிலை காரணமாக, மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருக்க, தமது அரசு பல்வேறு நடவடிக்கைளை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் ஒருபகுதியாக மதுரை விமான நிலையத்தை, சர்வதேச விமான நிலையமாகவும் TUTICORIN விமான நிலையம் இனி, தூத்துக்குடி விமான நிலையம் என அழைக்கப்படும் என்ற அறிவிப்பையும் பிரதமர் வெளியிட்டார். முன்னதாக, மதுரை விமான நிலையத்தில், அதிநவீன தொழில்நுட்ப கோபுர செயல்பாடுகளை காணொலி மூலம் பிரதமர் தொடக்கி வைத்தார்.

*பிரதமர்* 3 (8)

மதுரையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு. முரளிதர் மோஹோல், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மதுரை விமான நிலையம், சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கப்பட்ட நிலையில், இங்கிருந்து, பல்வேறு உலக நாடுகளுக்கான நேரடி விமான போக்குவரத்து மேம்படுவதுடன், மக்கள் தொடர்பு வலுப்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. தென்தமிழகத்தின் பொருளாதார மேம்பாடு, கலாச்சார உறவுகளை வலுப்படுத்தவும் இது வகை செய்கிறது.

------------------------------

*சிபி ராதாகிருஷ்ணன்* (9)

ஹிமாச்சல் பிரதேச மாநிலம் தரம்சாலாவில், இன்று நடைபெற்ற மத்திய பல்கலைக்கழகத்தின் 9ஆவது பட்டமளிப்பு விழாவில், குடியரசுத் துணைத் தலைவர் திரு. சிபி. ராதாகிருஷ்ணன், திறமையான 12 மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களையும், 8 மாணவர்களுக்கு முதுகலை பட்டங்களையும் வழங்கினார். மேலும், இந்த பட்டமளிப்பு விழாவில், பல்கலைக்கழகத்தின் 524 மாணவர்களுக்கு, பட்டங்கள் வழங்கப்பட்டன. விழாவில், அம்மாநில ஆளுநர் திரு. கவீந்தர் குப்தா,

முதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் சுகு, எதிர்கட்சித் தலைவர் திரு. ஜெய்ராம் தாக்கூர், மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

-----------------------------

*அமித் □ ா* (7)

பஞ்சாப்பில் மக்கள், ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா சமூக ஊடகப் பதிவில் கூறியுள்ளார். தற்போதுள்ள ஆம் ஆத்மி அரசு, போதைப் பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த தவறிவிட்டதாக அவர் குற்றம் சாட்டி உள்ளார். பஞ்சாப்பில், சட்டம்-ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் அவர் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். ஆம் ஆத்மி அரசுக்கு எதிராக பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

-----------------------------

*பியூஷ் கோயல்* (8)

பல்வேறு நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், முதலீட்டுக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கி உள்ளதாக, மத்திய தொழில்-வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, தொழில் புரிவதற்கு உகந்த சூழ்நிலை உறுதி செய்யப் பட்டுள்ளதாக குறிப்பிட்டார். இதன்காரணமாக இந்தியா, முதலீட்டுக்கு உகந்த நாடாக உருவெடுத்துள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

-----------------------------

*ஜிதேந்திர சிங்* (7)

நாட்டின் மேம்பட்ட க் ரயோஜெனிக் உந்து விசை திறன்களை வலுப்படுத்துவதில் எல்வி எம் 3 திட்ட சோதனை வெற்றிகரமாக நடத்திய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு, மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், பாராட்டு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், 22 டன் எடையுள்ள சிஇ-20 க்ரயோஜெனிக் எஞ்சின் சோதனை வெற்றி, உள்நாட்டு தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவதாக கூறியுள்ளார்.

-----------------------------

*பத்திரிக்கை தகவல் அலுவலகம்* (7)

பிரதமரின் மடிக்கணினி திட்டத்தின் கீழ், அனைத்து மாணவர்களுக்கும் இலவச மடிக்கணினிகள், அல்லது, 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுவதாக, சமூக வலைதளங்களில் வெளியாகும் செய்திகளை நம்ப

வேண்டாம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. மத்திய அரசின் திட்டங்கள் குறித்த அதிகாரப்பூர்வமான தகவல்களை மாணவர்கள் myscheme.gov.in என்ற இணைய தளத்தில் தெரிந்து கொள்ளுமாறு பத்திரிக்கை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

-----------------------------

*எரிவாயு* (10)

நாடு முழுவதும் பெட்ரோலிய பொருட்களின் வினியோகம் சீராக உள்ளதாக, மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. பொது மக்கள் இதுகுறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று, பெட்ரோலியத் துறையின் செய்திக் குறிப்பு கேட்டுக் கொண்டுள்ளது. சமையல் எரிவாயு சிலிண்டருக்காக தேவையில்லாமல் முன்பதிவு செய்ய வேண்டாம் என்றும், அதில் வலியுறுத்தப் பட்டுள்ளது. முன்பதிவு செய்த 3 நாட்களுக்குள், சிலிண்டர் வினியோகம் செய்யப் படுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, நாடு முழுவதும் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட பெட்ரோல் நிரப்பும் மையங்கள் வழக்கமாக செயல்பட்டு வருவதாகவும், பொது மக்கள், எந்த வதந்திகளையும் நம்பவேண்டாம் என்றும் எண்ணெய் நிறுவனங்கள் கேட்டுக் கொண்டுள்ளன.

-----------------------------

*புதுச்சேரி எரிவாயு* 1 (5)

புதுச்சேரி அரசு குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி சிலிண்டர்களை, வணிக நோக்கங்களுக்காக பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப் பட்டுள்ளதாக, தெரிவிக்கப் பட்டுள்ளது. இதுகுறித்த கூடுதல் தகவல்…..

*புதுச்சேரி எரிவாயு* 2 (12)

<u>உணவகங்கள், மற்றும், தேனீர் கடைகளில், சிலிண்டர் முறைகேடுகளை தடுக்க, அதிரடி சோதனைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சிலிண்டர்கள், போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாகவும், வினியோகத்தில் எந்த தடையும் இருக்காது என்றும், எண்ணெய் நிறுவனங்கள் உறுதி அளித்திருந்த நிலையில், சமூக வலைதளங்களில் பரவும் எரிபொருள் தட்டுப்பாடு குறித்த தவறான செய்திகளை பொது மக்கள் நம்ப வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டுள்ளது. சட்டவிரோதமாக சிலிண்டர் விற்பனை குறித்து பொது மக்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம்</u>

தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம். சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது, அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

*காரைக்கால் ஜிப்மர்* (10)

காரைக்கால் ஜிப்மர் மருத்துவமனையின் சிறப்பு நிபுணர் குழுவினர், இன்று, காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் நடைபெற்ற வயிறு மற்றும் குடலியல் மருத்துவ முகாமில் பங்கேற்றனர். இம்முகாமில், வயிறு மற்றும் குடலியல் சம்பந்தப்பட்ட நிபுணர்கள், நோயாளிகளுக்கு பரிசோதனைகளை மேற்கொண்டனர். குறிப்பாக வயிற்று வலி, அமிலத்தன்மை, கல்லீரல் கோளாறுகள், மற்றும், பித்தப்பை பிரச்சனை உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளுக்கு, விரிவான ஆலோசனைகளை வழங்கி, அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கான மேல் சிகிச்சை மற்றும் கண்காணிப்பு குறித்து வழிகாட்டுதல்களை அளித்தனர்.

-----------------------------

*ஐஎன்எஸ் சுதர்சினி* (7)

இந்திய கடற்படை பயிற்சிக் கப்பல் ஐஎன்எஸ் சுதர்சினி, ஐரோப்பிய தீவு நாடான மால்டா சென்றடைந்தது. நட்பு ரீதியான இந்த கடல் பயணத்தின் மூலம், இந்தியா மற்றும் மால்டா இடையேயான பாதுகாப்பு, மற்றும், இருதரப்பு ஒத்துழைப்பு அதிகரிக்கும். மேலும், இந்திய பெருங்கடல் பகுதியில் உள்ள அனைத்து நாடுகளிலும், மக்கள் தொடர்பு மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில், இந்நடவடிக்கை அமைந்துள்ளதாக, மத்திய அரசு அறிவித்துள்ளது.

-----------------------------

*யுவசங்கம்* (14)

ஒரே பாரதம் உன்னத பாரதம் திட்டத்தின் கீழ், இளைஞர்களுக்காக மத்திய அரசு நடத்தும் யுவசங்கத்தின் 6ஆம் பதிப்புக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்தியா முழுவதிலும் இருந்து இளைஞர்கள் இதில் பங்கேற்க, கல்வியமைச்சகம் அழைப்பு விடுத்துள்ளது. பல்வேறு மாநிலங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வதன் மூலம் இந்தியாவின் வளமான, கலாச்சார பாரம்பரியம், சுற்றுச் சூழல் அமைப்புகளை கற்று உணர, வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா, பாரம்பரியம், மேம்பாடு, மக்களுக்கு இடையேயான இணைப்பு, தொழில்நுட்பம் ஆகிய 5 கருப்பொருளின் அடிப்படையில் இந்த யுவசங்கம் நடைபெற உள்ளது.

-----------------------------

*விளையாட்டு (10)*

உலக பாரா கிராண்ட் ஃப்ரி தடகள சேம்பியன் ஷிப் போட்டியில், இந்தியாவின் ப்ரீத்தி பால் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 200 மீட்டர் ஓட்டப் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார். இப்போட்டியில், இந்தியா 75 தங்கம், 69 வெள்ளி, 64 வெண்கலப் பதக்கங்களை வென்று, பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச தடகள சாம்பியன் ஷிப் போட்டியில் ஆடவர் நீளம் தாண்டுதல் பிரிவில், இந்தியாவின் லோக்கேஷ் சத்தியநாதன், தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

ஹைதராபாத்தில் நடைபெறும் மகளிர் உலக கோப்பை ஹாக்கி தகுதி சுற்று இறுதி ஆட்டத்தில், இன்றிரவு 7.30 மணிக்கு, இந்தியா, இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

-----------------------------

*வானிலை (6)*

தமிழகம், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என்று, இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில், தமிழகம், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், அதிகபட்ச வெப்பநிலையில் மாற்றம் ஏதும் இல்லை எனவும், ஓரிரு இடங்களில், இயல்பில் இருந்து 2 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை உயரும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அசாம் மாநிலம் சில்ச்சரில், 23 ஆயிரத்து 550 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்தார்.

ஹிமாச்சல் பிரதேசம் தரம்சாலாவில், இன்று நடைபெற்ற மத்திய பல்கலைக்கழகத்தின் 9ஆவது பட்டமளிப்பு விழாவில், குடியரசுத் துணைத் தலைவர் திரு. சிபி. ராதாகிருஷ்ணன், கலந்து கொண்டார்.

புதுச்சேரியில், வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி சிலிண்டர்களை, வணிக நோக்கங்களுக்காக பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப் பட்டுள்ளதாக, குடிமைப் பொருள் வழங்கல் துறை தெரிவித்துள்ளது.

ஹைதராபாத்தில் நடைபெறும் மகளிர் உலக கோப்பை ஹாக்கி தகுதி சுற்று இறுதி ஆட்டத்தில், இன்றிரவு 7.30 மணிக்கு, இந்தியா, இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.